**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**MCOP.No: 266/2024** **நாள் 09.07.2026**

**ம.சா.1, திருமதி. பங்காரம்மாள்**

**மா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

விபத்து சமயத்தில் என் கணவர் இருசக்கர வாகனமான TVS XL TN 79 A 1125 என்ற வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றால் சரிதான். என் கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் அதன் காப்பீடு நிறுவனத்தை நாங்கள் இந்த மனுவில் சேர்க்காததால் இந்த மனுவானதை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் அது சரியல்ல. விபத்தினை நான் நேரில் பார்க்கவில்லை. என் கணவர் இருசக்கர வாகனத்தினை ஓட்டி சென்ற போது அவர் சாலை விதிகளை மதிக்காமல் அதிகவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று எதிர்மனுதாரரின் பேருந்து மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் அது சரயிலல. என் கணவரின் மீதான தவறை மறைப்பதற்காக வேண்டி இந்த வாகன விபத்திற்கு எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் தான் காரணம் என்று நாங்கள் பொய்யாக சொல்கிறோம் என்றால் அது சரியல்ல. விபத்து சமயத்தில் என் கணவர் ரெட்டியப்பட்டியில் டீ கடை வைத்து நடத்தி வந்தார் என்று நான் மசாஆ.11 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளது வழக்கிற்காக வேண்டி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் அது சரியல்ல . நாங்கள் சொல்வது போல் மாதம் ரூபாய் 20 ஆயிரத்தை சம்பாத்தியம் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் அது சரியல்ல. விபத்து சமயத்தில் என் கணவருக்கு வயது 75க்கு மேல் ஆனபடியால் அவர் வயோதிகத்தின் காரணமாக தான் இறந்துபோனார் என்றும் இந்த வாகன விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் அவர் இறந்துபோகவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. என் கணவர் எந்த சம்பாத்தியமும் செய்து எங்களுக்கு கொடுக்கவில்லை என்றும் நாங்கள் யாரும் என் கணவரின் வருமானத்தை சார்ந்து இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. இந்த விபத்திற்கு என் கணவரின் அஜாக்கிரதை, கவனக்குறைவு காரணம் என்பதால் இந்த எதிர்மனுதாரர் எங்களுக்கு விபத்து இழப்பீடு தொகையை செலுத்த வேண்டியதில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்றும், நாங்கள் கோரியுள்ள நஷ்ட ஈடு தொகை அதிகமானது என்றும் எனவே நாங்கள் தாக்கல் செய்துள்ள மனுவானதை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 09thday of July 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.